# <u>வீடு வாடகை ஒப்பந்தப் பத்திரம்</u>

2026 ம் வருடம் பிப்ரவரி மாதம் 01 -ந் தேதி சென்னை 600078,கே.கே.நகர், 14th செக்டார் ,103 வது தெரு , கதவு எண்: 1708/ 50,என்ற விலாசத்தில் உள்ள வீட்ல் முதல் தளத்தில் வசிக்கும் திரு.தண்டபாணி அவர்களின் மனைவி திருமதி, தனலட்சுமி தண்டபாணி அவர்கள் ( ஆதார் எண் : 481189085960 ) ( வீட்டின் உரிமையாளர்) 1 வது பார்ட்டியாகவும்,

சென்னை -600083, அசோக் நகர்,85 வது தெரு, கதவு எண்; 20/60 என்ற விலாசத்தில் வசித்து வரும் திருமதி.கீர்த்தனா கிருஷ்ணன் அவர்கள் ( ஆதார் எண்: 619 454965193 ) ( வீட்டின் வாடகைதாரர் ) 2 - வது பார்ட்டியாகவும்,

ஆக நாம் இருபார்ட்டிகளும் சேர்ந்து சம்மதித்து எழுதிக் கொண்ட வீடு வாடகை ஒப்பந்தப் பத்திரம் என்னவென்றால்,

மேற்படி 2 வது பார்ட்டி வாடகைக்கு வர இருக்கும் நம்மில் 1 வது பார்ட்டிக்கு சொந்தமான சென்னை -600078,கே.கே.நகர் ,14th செக்டர்,103 வது தெரு, கதவு எண்: 1708/50 என்ற விலாசத்தில் உள்ள வீட்டில் தரை தளத்தில் 2 வது பார்ட்டிக்கு வீட்டு குடித்தனத்திற்காக ( RESIDENTIALPURPOSES ) வாடகைக்கு கேட்க , அதற்கு நம்மில் 1 வது பார்ட்டியும் வாடகைக்கு விட சம்மதித்து, நாம் இரு பார்ட்டிகளும் கீழ்க்கண்ட ஷரத்துகளுக்கு கட்டுப்பட்டு கையெழுத்து செய்துள்ள வீடு வாடகை ஒப்பந்தப் பத்திரம்.

முதல் பார்ட்டி இரண்டாவது பார்ட்டி

1) மேற்படி வீட்டிற்கு நம்மில் 1 வது பார்ட்டி அட்வான்ஸ் தொகையை 2 வது பார்ட்டியிடமிருந்து 1 வது பார்ட்டி ரூ.80,000/-( ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) என நிர்ணயித்து 1 வது பார்ட்டி பெற்றுக் கொண்டதற்கு இதுவே ரசீதாகும்.
2) மேற்படி வீட்டிற்கு நம்மில் 2 வது பார்ட்டி மாத வாடகையாக ரூ. 15,500 / - ( ரூபாய் பதினைந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்) 1 வது பார்ட்டிக்கு கொடுக்க சம்மதிக்கிறார்.
3) மேற்படி வீட்டிற்கு இந்த அக்ரிமெண்ட் 11 மாத காலத்திற்கு அதாவது 01/2/2026 முதல் 01 / 01 / 2027 வரை மட்டும் செல்லுபடியாகும். அதன்பிறகு இரு பார்ட்டிகளும் சம்மதித்தால் மேற்படி வாடகை அக்ரிமெண்ட்டை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
4) மேற்படி வீட்டிற்கு உண்டான மாத வாடகை நம்மில் 2 வது பார்ட்டி பிரதி மாதம் 01 - ம் தேதியிலிருந்து 05 - ம் தேதிக்குள் 1 வது பார்ட்டியிடம் கொடுத்துவிட வேண்டும். 2 வது பார்ட்டி மின் கட்டணம் செலுத்த மின்சார அட்டை கொடுக்கப்படும்.
5) மேற்படி வீட்டிற்கு காப்புத் தொகையாக ரூ.80,000/-( ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) 2 வது பார்ட்டி காலி செய்து போகும் போது 1 வது பார்ட்டி திருப்பித் தர வேண்டும்.
6) மேற்படி வீட்டை நம்மில் 2 வது பார்ட்டி காலி செய்யும் போது 1 வது பார்ட்டி தான் பெற்றுக் கொண்டுள்ள அட்வான்ஸ் தொகையில் வீட்டில் சேதாரம், மின்சாரம் கட்டணம், வாடகை பாக்கியிருந்தால் பிடித்தம் செய்து கொண்டு மீதி தொகையை எந்த விதமான மறுப்பும் இன்றி செலுத்திவிட வேண்டியது.
7) மேற்படி வீட்டை 2 வது பார்ட்டி மேல் வாடகைக்கு விடவோ அல்லது ஒரு பகுதி யை வாடகைக்கு விடவோ 2 வது பார்ட்டிக்கு அதிகாரம் இல்லை.1 வது பார்ட்டி வீட்டை பார்வையிடுவதற்கு உரிய கால நேரத்தில் பார்வையிட 2 வது பார்ட்டி அனுமதிக்க வேண்டும்.
8) மேற்படி வீட்டை நம்மில் 2 வது பார்ட்டி காலி செய்ய விரும்பினாலோ அல்லது 1 வது பார்ட்டிக்கு வீடு தேவைப்பட்டாலோ 3 மாதத்திற்கு முன் தெரிவித்துக் கொண்டு காலி செய்து தர வேண்டும்.
9) மேற்படி வீட்டை நம்மில் 2 வது பார்ட்டி காலி செய்யும் போது வீட்டை பெயிண்ட் செய்து கொடுக்க வேண்டும் . இல்லையென்றால் அட்வான்ஸ் தொகையிலிருது பிடித்தம் செய்யப்படும் .

இந்தபடிக்கு நாம் 1 வது மற்றும் 2 வது ஆகிய இரு பார்ட்டிகளும் சேர்ந்து சம்மதித்து எழுதிக் கொண்ட வீடு வாடகை ஒப்பந்தப் பத்திரமாகும்.

2 வது பார்ட்டி                                        1 வது பார்ட்டி

சாட்சிகள் :

1.